173
134
V. PR. PL.
1-5-18
3511
8

ஓம்.

# தவம்

## ஓர் நலந்தரும் உபந்யாஸம்.

உடம்பினாற்பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட வீசனைத்தேடு.—ஔவைகுறள்.

ச. தா. மூர்த்தி முதலியார்
இயற்றி,

ஒரு புண்ணிய சீலரால்
வெளியிடப்பெற்றது.

கிருஷ்ணாஸ் எலெக்ட்ரிக் அச்சேந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1917.

இதின் விலை அணா 1.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

நம்பர் 764

உ

சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
திருவள்ளுவர் நூல் நிலையம்,
பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் வெ. பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களால் இனாமளிக்கப்பெற்றது.

.................. ஆண்டு .................. திங்கள் .......... நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

உ

# தவம்.

## ஓர் நலந்தரும் உபந்யாஸம்.

தவமென்றால்—விரதம், நோன்பு, தொண்டு, என்னும் பலபெயர்கள் தாங்கிநிற்கும் கடப்பாடாகும். மானுடராகப் பிறந்த ஒவ்வொருவரும், மேலும் பிறக்காமலிருப்பதற்கான வழியையோ, அல்லது உயர்ந்தபிறவி யெடுக்கக்கூடிய நிலைமையையோ, அல்லது எடுத்துற்ற பிறவிதானே நீடித்து நிற்பதற்கான மார்க்கத்தையோ, அடைந்துற, நமக்கு முன்னிருந்த பெரியோர்கள், தாங்கள் அனுபவமாய்க் கண்டறிந்த மார்க்கங்களைத் தமக்குப்பின் தோற்றும் சந்ததியார்கள், தம்மைப் போலவே யனுட்டித்துப் பேறுபெறவேண்டு மென்னும் பெருநோக்கங் காரணமாக அமைத்துப்போன, நன்னெறியாம். அவர்கள் காட்டியவழியில் நின்றொழுகுதலே நம்முடையகடமையாகையால் கடப்பாடு என்றோம். இனிநாம்தாமே அனுட்டித்துப் பயனுடையனவென அறிந்துறும் புதுமார்க்கங்கள் எவையேனும் உளவேல், அவைகள் நமக்குப்பின்வரும் சந்ததியார் அனுட்டிப்பதற் கானவையாகும்.

ஆனால் நமக்கு முன்னிருந்த பெரியோர்கள், எல்லாவற்றையும் நம்முடைய நன்மைக்காக உதவிப் போயிருக்கிறார்கள். அவர்கள் காட்டியவழியில் நின்றொழுகாமல், வாளாபொழுது போக்கித்திரியும் நாம், எங்ஙனம் நம்முடைய சந்ததியாருக்குப் புதியவழிகள் தேடிவைக்கப் போகின்றோம்!

இனி, கடப்பாடு என்றதனாலே, கட்டாயமாகச்செய்ய வேண்டிய காரியமென்பதாயிற்று. எனவே, மானுடராகப் பிறந்த ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண்டிய கடமை யென்று மாயிற்று. இக்கடமை யாதெனிலோ, முன்னரே இசைத்தாங்கு நம் முன்னோர்கள் நம்முடைய அனுட்டானத் திற்கென்று அமைத்துபோன காரியங்களைக் கைக்கொள்ளுத லேயாம். அவ்வகையில் அடங்குறாத ஏனைய காரியங்களெல்லாம் கைக்கொள்ளாதன வாகுமாகையால் அவைகளைவிலக்கலுமாம்.

இவ்வழி நின்றொழுகினால் அதன்பயனாகச் சித்திப்பது யாதெனிலோ, அதையும் முன்னரே கூறியுள்ளோம். அதாவது பின்னிலைமை உயர்வழியினதாயிருக்கவே யாகும்.

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட்டவர்க்கு.

என்று திருவாய்மலர்ந்தருளினார் பெருநாவலரும். கூற்ற மென்றால்—முற்பவத்தின் வினைவழிசித்தித்த ஆயுளின் இறு தியாகும். அதைக்கடத்தலும் ஆம் என்றார். எனவே அதை, அதாவது அவ்விறுதியை, நீட்டிநிற்றலும் அமையுமென்பதா யிற்று. அப்படிச்செய்தல் யார்க்குக்கூடும் என்றால், தவத்தைக் கைப்பிடித்தோர்க்கு என்றார். இதைப்பார்க்கிலும், தவத்தின் பயனை யெடுத்துக்காட்டும் சான்று, வேறுவேண்டுமா?

சாதாரணமாய், முது நூல்களெல்லாம் மனிதற்கு வயது நூறல்லதில்லை என்றே அறைந்துள்ளன—இந்தக்காலவளவு ஏகதேசமாய்ச்சற்று நீண்டும், பெரும்பான்மையில் சுருக்கமுற் றும் இருக்கக்கண் கூடாகக்காண்கிறோம். ஆனால் அவ்வயது அளவில் காலம் அதாவது அநேக-எண்ணிற்கடங்காத-நூற்

ளுண்டுகளாய் நீண்டுகிடத்தல் முடியும் என்பதை அவ்விஷயத்தில் நம்பிக்கையுற்ருேர் அறிவார்கள். சிரஞ்சீவியர்களாயிருக்கக்கூடியவர்களென்ன, ஜீவன்முத்தர்பதவி யடைந்துற்ருேர்களென்ன, இன்னும் யோகசாதனையெய்துற்ற மஹான்களென்ன, இவர்களெல்லாம் மனிதர்களுக்கு அளந்துவிடப்பட்ட காலவளவுக்குள் நின்ருேர்களாவென்று ஆராய்ந்துபாருங்கள்! இவர்களெல்லாம் கூற்றங்குதித்தவர் களல்லவா? தங்களுக்கு அளந்துவிடப்பட்ட காலவளவை நீட்டிக்கொண்டவர்களல்லவா? எப்படி நீட்டிக்கொண்டார்கள்? தவத்தின் வழிநின்றே என்னும் ஒரே ஒரு விடைதான் இதற்குப்பதிலாகச் சொல்லவமையும்.

மற்ெருன்று,

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப்படும்.

என்றகுறளடியைக் கவனிப்பாம். முயன்றகாலையில் மறுமைக்கண் தாம் வேண்டியபயன்கள் வேண்டியவாறே பெறலாம், ஆகையால் செய்யப்படுவதாகிய தவம் இம்மைக்கண் முயலப்படும் என்பதாயிற்று. இதில் வேண்டியபயன்கள் என்றதனல்? விருப்பு வெறுப்பு கூடாது, ஒவ்வொருவரும்.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டுமிடும் பையில,

என்பதையறிந்து அவ்வழி நின்ெருழுகவேண்டு மென்று கூறப்பட்டிருந்தபோதிலும், பலவகைமனிதர்கள் கொண்டுலவும் இந்நிலவுலகில் ஒவ்வொருவரும் இவ்வொருவழியையே பற்றியனுசரித்தல் என்பது எதிர்பார்க்கக்கூடாத காரியமாகும்; ஆகையினல் நம்முன்னேர்கள் நமக்குப்பலநல்வழிகளைக்

காட்டிப் போயிருக்கிறார்கள். அவைகளில் இதுவும் ஒன்றாகும். அதாவது விருப்பங்கொள்ளுதல் சரியன்று, ஆனால் விருப்பங்கொண்டுறில் விருப்பங்கொள்ள நேரிடில் உயர்ந்த நோக்கங்கொண்டதா யிருக்கவேண்டும்; அவ்வித நோக்கத்தைக் கீழ்ப்பிறவிகள் உற்றிருந்தபொழுது கொண்டேப், நல்வழி நின்றொழுகியுமே இப்பிறவியை யடைந்தோம், இனி, மேலும் நற்பயன் பெறவேண்டில் வேண்டியவாறே பெறுதற்குத்தவமே சாதகமாயிருக்கிறபடியால் அதைமுயன்று பெறுங்கள் என்றுபதேசித்தனர். மறுமைக்கண்வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் என்றதனுனே, முற்பவத்தில் நாம் வேண்டியவாறும் அதையடையத்தவத்தில் நின்றொழுகியதாலும் இம்மையில் இந்நிலைசித்தித்தது என்பது பெறப்பட்டது இனி, மறுமைக்கு ஆதாரம் இம்மையின்காரிய காரணங்களாகையால் அவ்வாறே நின்றொழுகுங்கள் என்றார். தவம் தானுக வந்துறுதாகையால் முயன்று தேடுங்கள் என்றார். முயன்றால் பயன்பெறுவது சத்தியமான விஷயமாகுமாகையால் முயன்று பெறுங்கள் என்றார். இதற்குச்சான்றுங் காட்டியருளினார்.

இலர்பலராகிய காரண நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்.

என்னும் இக்குறளைக்கவனியுங்கள். உலகத்தில் செல்வர்கள் சிலராக, நல்கூர்வார் (தரித்திரர்) பலராதற்குக் காரணம் யாதென்றாராய்ந்துழி; அது தவஞ் செய்வார் சிலராகவும் செய்யாதார் பலராதலும்போல வென்றார். நாம்காணுறும் செல்வவந்தர் களெல்லாம் முற்பவத்தில் தவமியற்றியவர்களாவர். தரித்திரர்களெல்லாம் அது புரியாதோராவர். இது கொண்டு, தவம் முயன்றகாலையிற்றான் சித்திக்குமென்றும்

முயற்சி கொள்ளாதபொழுது சித்திக்காதென்றும், அப்படி முயல்பவர் உலகத்தில்வெகு சிலராகவே உள்ளார்களென்றும், இதற்குத்திருட்டாந்தம் உலகத்துள்ளசெல்வர்கள் சிலராகவும் மற்றையோர் பலராகவுமிருப்பதே சான்று பகருகிறதென்றும் காட்டியுள்ளதைக் கவனியுங்கள். இவ்வுண்மையை யறிந்த மேலாகிலும், தவத்தைக் கைக்கொள்ளுதல் ஒவ்வொருவருக்கும் அமைந்த கடமையாகுமென்பதாக அதன்வழி நின்றொழுக வேண்டுமாய்க் கூறுகிறோம்.

தவம் புரிபவர் என்னடைவர் அது புரியாதோர் என்னுவர் என்பனவற்றை ஒருசிறிது ஆராய்ந்துபார்ப்பாம்.

> தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் மற்றல்லா
> ரவஞ் செய்வாராசையுட் பட்டு

என்றார் பொய்யாமொழியார். அதாவது தங்கருமஞ்செய்வார் தவஞ்செய்வார். அது செய்யாதவர் பொருளல்லவற்றைப் பொருளாகமதித்து அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடுசம்பாதித்துக் கொண்டவராவரென்றார். இதில் தங்கருமஞ் செய்வாரென்றதனால் தமது கடமையின்னதென்பதையறிந்து அதன்வழி நின்றொழுகுவோரென்பதாயிற்று. அக்கடமையாதெனிலோ தவமேயாகும். அதன்வழி நடந்தோர் மேற்கூறிப்போந்த நன்மைகளையெல்லாம் அடைவாரென்பதாயிற்று. அவ்வழி நின்றொழுகாதோர் வீண் ஆசைவயப்பட்டுத் தமக்குக்கேடுதேடிக் கொண்டவராவரென்பதும் விளங்காநிற்கிறது. முதற்கண் அறியாமையின் வயப்பட்டிருக்கும்பொழுது ஒவ்வொருவரும் ஆசைவலையுட்சிக்குறுதல் சகஜமாயினும், அறியாமையை அதாவது அஞ்ஞானத்தைத் தாம் கற்றஞானங்கொண்டு சிதைத்தமேலும் அவ்வழி

நின்றொழிகின் அது பரிதபிக்கக்கூடிய சம்பவமாகும். அஞ் ஞானம் எதுபோன்றதெனின் பொன்னுடன் பற்றிநிற்கும் களிம்புபோன்றதென்போம். பொன் விலையேறப்பெற்ற-உயர்ந்ததாக மதிக்கப்பெறும்-உலோகமாயிருந்தும் அதைக் களிம்பு பற்றாமலிருக்கவில்லை. அதிற்பற்றியகளிம்போ கண்ணினால் பார்க்கமுடியாத தன்மையினதாயிருக்கிறது. அப்படியிருக்குங் களிம்பைப்போக்கும் வகைதான் யாதெனிலோ நெருப்பிற் புடமிடுதலே. அதுபோலவே உயர்ந்த ஞானம் பெற்றவர்களாகக் கருதப்படுவோரும் அறியாமையினால் மூடப்பட்டு ஆசைவயப்பட்டுத் திரிந்துழலாநிற்கிறார்கள், அவ்வித அஞ்ஞானத்தைப்போக்கி ஆசையையறுத்துவைத்தல் தவத்திற்கேமுடியும்.

சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

என்னும் குறளடியைக்கவனிக்கின் இதுவிளங்குறும். தீயின் கணோடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னோடுகலந்த மாசுநீங்கி ஒளிமிகுவதுபோல தவஞ் செய்யவல்லார்க்கு அதனால் வருந்துன்பம் வருத்தவருத்தத் தம்மோடுகலந்த பாவம் நீங்கி ஞானம் மிகும் என்றசத்தியமொழி ஆராய்ந்துபார்க்குந் தன்மையுடையதாம்.

இத்துணை நலங்களை ஒருவருக்கு நல்குவதாகிய தவம் என்பதுயாதென்று இனி ஆராய்வாம். தவம் என்றமாத்திரத்திற்றானே அது மிக்கக்கஷ்டமானதோர் காரியமென்றோ அல்லது எல்லோராலுஞ்செய்து முடிக்கக்கூடியவகையி லில்லாததாகிய காரியமென்றோகருதி மருளவேண்டாம். நம்முடைய முன்னோர்கள் நம்முடைய நன்மைக்கென வமைத்துப்போன

ஒவ்வொருகாரியமும் சகலராலும் அனுட்டித்து முடிக்கும்படி யான தன்மையிற்றேனே இருக்கின்றது. ஒவ்வொரு நற்காரி யத்தையும் தொடங்க ஆரம்பிக்கையில் யாதொருமுதலுமில் லாமல் சித்தசங்கற்பத்தோடு ஆரம்பிக்கவேண்டும். அதன் பிறகு அவ்வழியிலிருந்து விலகிவிடாமலோ, பின்தங்கிவிடா மலோ, ஜாக்கிரதையுடனிருந்து படிப்படியாய் முன்னேறிக் கொண்டு போகவேண்டும். இவ்வழி நின்றொழுகுபவனே அரிய தபசியாகின்றான். இந்தப்பீடிகையுடன் இனி தவம் இன்னதென்பதைப்பற்றியும் அதுபுரியும் வழிகளைப்பற்றியும் இசைப்பாம்.

தவம் என்பது நோன்பு அல்லது விரதம் என்று இதன் துவக்கத்திலேயே கூறிவிட்டோம், மேலும் அது நாம்-உல கத்தில் மனிதர்களாகப்பிறந்தோர்-செய்யவமைந்துள்ள கட மையென்றும் கூறியுள்ளோம். இனி அக்கடமை யாதெ னிலோ? அதுபலவகையில் விரிந்துநிற்கின்றது. அப்படி யிருப்பினும் அத்தகைய கடமைகள்யாவும் மூன்றுதலைமை யான கடமைகளில் ஐக்கியப்பட்டு நிற்கின்றனவென்னலாம். அம்மூன்று கடமைகள்யாவை; அவைகளை விவரிக்கும் மூன்று அரிய பாக்கள் திருவிளையாடற்புராணத்துள்ளன. அவைகீழ் வருவனவாம்:—

மானதமே வாசிகமே காயிகமே யெனவகுத்த
ஈனமில்சீர்த் தவமூன்று மிவற்றின் மானதந்தரும
தானமிசை மதிவைத்தல் தயவுபொறை மெய்சிவனை
மோனமுறத் தியானித்தல் ஐந்தடக்கன் முதலனந்தம்.

வாசிக மைந்தெழுத்தோதன் மனுப்பஞ்ச சாந்திமறை
பேசுசத வுருத்திரந் தோத்திரமுரைத்தல் பெருந்தருமங்
காசகல வெடுத்தோதன் முதலனந்தங் காயிகங்கள்
ஈசனருச்சனை கோயில்வலஞ் செய்கை யெதிர்வணங்கல்.

*நிருத்தனுறை பதிபலபோய்ப் பணிதல்பணி நிறைவேற்றல்*
*திருத்தன்முடி நதியாதிதீர்த்த யாத்திரைபோய் மெய்*
*வருத்தமுற வாடலிவை முதற்பலவவ் வகைமூன்றிற்*
*பொருத்தமுறு காயிகங்கள் சிறந்தனவிப் புண்ணியத்துள்.*

மானதம், வாசிகம், காயிகம் எனத் தவம் மூன்றுவகையாம். மானதம் என்றால் மனதாற்செய்யப்படும் தவம், வாசிகம் என்றால் வாக்காற்செய்யப்படும் தவம், மற்று, காயிகம் என்றால் காயத்தாற்செய்யப்படும் தவம். இவற்றிற்கு நேர்தமிழ்மொழியில் மனத்தொண்டு, வாக்குத்தொண்டு, காயத்தொண்டு என்று சொல்லப்படும். இத்தொண்டுகளின் வழியே நின்றொழுகினோர்கள் நம்முடைய நாட்டில் எண்ணிறந்தோர்கள் இருந்தனர்கள், இன்றும் இருந்தும் வருகின்றார்கள். திருத்தொண்டர் புராணத்துள் இயம்பப்பட்டிருக்கும் அடியவர்கள் எல்லோரும் இத்தொண்டுகள் மூன்றையுமோ அல்லது ஒன்று இரண்டையோ கடைப்பிடித்து ஒழுகினோர்கள் ஆவர். சைவ சமயாசாரியர்களாகிய திருநாவுக்கரையர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்பவர்களும் இத்தொண்டுகளின் வழிநின்றொழுகியவர்களே யாவர்.

அப்பெரியார்களை நாம் வணங்கிவருவதற்குக் காரணம் யாதெனிலோ, அவர்களுடைய அரிய தவமே. தவமியற்றுபவர் தம்முடைய உயிரைத் தமக்குரித்தானதாகப் பெற்றவர்களாகையால், அவ்வகையில் பெறுதனவாகிய ஏனைய மன்னுயிர்களெல்லாம் அத்தகையோர்களைத் தொழும் என்றனர் பொய்யா மொழியாரும்.

*தன்னுயிர் தானறப்பெற்றானை யேனைய*
*மன்னுயி ரெல்லாந் தொழும்.*

இக்குறளடியைக் கவனிக்கின் இவ்வுண்மை விளங்காமற் போகாது.

இனி, இத்தவம் அல்லது தொண்டு மூன்றும் ஒவ்வொருவராலும் அநுஷ்டித்து முடிக்கக்கூடிய விதத்திலிருக்கின்றன. எப்படியென்று ஆராய்ந்துபார்ப்போம்.

முதலாவதாக, மானதம் அல்லது மனத்தொண்டு யாதெனிலோ ? தருமம் தானம் இவைகளின்மேல் மனம் வைத்தல் என்றார். தருமம் என்பது அறம் என்றும், அறம் என்றால் விதிக்கப்பட்ட கடமைகளைக்கைக்கொண்டும், விதிக்கப்படாதனவற்றை கைக்கொள்ளாது விலக்கலுமாம் என்று கூறலாம். அத்தகைய அறங்கள் முப்பத்திரண்டு என்னும் எண்ணிக்கையுள் அடக்கிக்கூறியுள்ளார்கள் நமது பெரியோர்கள். இவ்வழிநின்று ஒழுகுதல் கிரமமாம். எனவே அவ்வழி நின்றொழுகாத ஏனைய காரியமெல்லாம் கிரமமன்றாகும். கிரமமல்லாததாக, அவைகளைக் கைக்கொண்டார் நற்பயனெய்தாமல் இகத்தும் பரத்தும் துன்புற்று நிற்கவமையும். தருமம் என்ற மாத்திரத்தில் நன்னெறிகள் பலவற்றையெடுத்தியம்பியதாயிற்று. நன்னெறி-நல்லவழி-என்றுமே நல்ல இடத்திற் கொண்டுபோய்ச்சேர்க்கும். அவ்வழி செல்லுவதற்கு மனம் இடந்தர வேண்டுமாகையாலும் மனத்தையடக்கினால் மாத்திரந்தான் அவ்வழிச்செல்ல மனம் இடங்கொடுக்குமாகையாலும் இத்தவத்தை மானததவத்தின் முதற்கிரியையாகக் கூறியருளினார். ஆகவே தருமத்தைக் கடைப்பிடித்தொழுகினால், அதன்பிறகு வரிசைக்கிரமத்தில் கூறியருளிய தானம் தயவு, பொறை மெய், சிவனை மோனமுறத்தியானித்தல், இவையாவும் தாமாகவே சித்திப்பதாகும். ஆகையினால்

மானத தவம் இயற்றவேண்டியவர்கள் தருமவழி நின்றொழுக தருமத்தின்மீது மதிவைக்கவேண்டியது ஆவசியமாகும். இந்த சங்கற்பஞ்செய்து கொண்டால் அதன் பின்பற்ருகவோ அல்லது அதன் தொடாச்சி நிலையாகவோ மற்றெல்லா நன்மைகளும் ஒன்றன்பின்னொன்ருய் வந்தமைந்துற்று, மானத தவத்திற் செம்மைபெற்று அதனுடைய பூரணபலனடைய வழியுண்டாகும். தானம் என்ருல் சற்பாத்திரங்கள் அதாவது தானம் செய்யவேண்டிய காலம், இடம் முதலியன அறிந்து செய்தலாம். தானத்தை ஒவ்வொருவரும் விருப்பத்தோடு கைக்கொள்ள வேண்டியதாகும். ஆகையினுல் தான், ஔவை மூதாட்டியார் தானமது விரும்பு என்று திருவாய் மலர்ந்தருளினுர். தானம் இகத்தில்தானே, அது செய்வோனுக்கு இன்பங்கொடுக்கா நிற்கக்காணலாம். உதாரணமாக, ஒரு பிச்சைக்காரனிருக்கிருன், அவன் சிலபகல் வயிற்றுக்கு உணவில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு ஒருவனில்லஞ் செல்லுகிருன், அவ்வில்லான் உடனே அவனை எதிர் கொண்டழைத்து, தன்னிடமுள்ள உணவுப்பொருள் கொண்டுவந்து கொடுத்து அவ்வறியோனுடைய பசிப்பிணியை யாற்றிவைக்கிருன், அதுகாலை அன்னமயமில்லாக்குறைவால் மயக்குற்றிருந்த அவனுடைய பிராணனுக்கு பிரகாசத்தைத்தேடியமைத்ததால் அவ்வறியோன் அதுகாலையில் அடையும் ஆனந்தத்தில் அவ்வில்லான் எவ்வளவு ஈடுபட்டவனுவான் கருதுங்கள். பொருள்கொண்டு இன்பந்தேட நேரிடில் இவ்விதமாகிய இன்பத்தையன்ருேதேடவேண்டும். இவ்வின்பத்திற்கு வேறு எதையாகிலும் ஒப்பிட்டுப்பேச முடியுமா? இதுபோலவே பொருளில்லார்க்குப் பொருளுதவியும், சரீரசகாயம் வேண்டியவர்களுக்கு அவ்வித சகாயம் புரிந்தும்வருதல் தவத்தின் பாலதாம். இவ்விதங்களிலாய் தானம் பலவுஞ்செய்ய மனம்

அன்பு நிறைந்ததாக இருந்தால் மாத்திரந்தான் அமையுமா கையால் தானத்தை மானதமென்னும் தவத்தினதாகக்கூறி யருளினர். தயவு-ஜீவகாருண்யத்தைக் கைக்கொள்ளல், எனவே பிறவுயிர்களைத் தன் பொருட்டோ பிறர் பொருட்டோ கோராமல், அவைகளுக்கு எத்தகைய இம்சையும் தன்னலோ அல்லது பிறராலோ நேரிடாமற்படிக்குக்காத்து, அவைகள் ஏதும்துன்புற்று நிற்குமேல் உடனே அத்துன்பத்தைப்போக்கல். எளியோர், பிறரது சகாயத்தைக்கோரி நிற்பவர் முதலியோர்களுக்குக் காவாது தன்னல்கூடிய சகாயத்தைப்புரிதல், முதலினசெய்தல். பொறை-சாந்தத்தைக்கையாடுதல். எனவே, ஒருவன் என்றுமே சாந்தமூர்த்தியாய் விளங்கவேண்டும். தன்னுயிருக்கே ஹானிதேடி ஒருவன் வந்தபோதிலும் அவன் மீது வெறுண்டுவிழாமல், சாந்தத்தைக்கொண்டு நோக்கில் அத்தகையோன் தன் மனதுட்கொண்டுவந்த கொடிய வெண்ணம் கொடியில் அழிந்து போய்விடுவது நிச்சயம். மேலும் மனதில் சாந்தம் இல்லாதுபோனல் அங்கே கோபமானது வந்து நிற்கவேதுவாகும். கோபம் அக்கினிக்குச்சமானமானதாகும். அக்கினி எப்படி அது தங்கிநின்ற இடத்தையும் தன்னைச்சுற்றிலுமுள்ள பதார்த்தங்களையும் தன் வயமாக்கித் தன் மயஞ்செய்துவிடுமோ, அது போலவே கோபம் மனதில் தங்குறுமேல், அம்மனதைக்கெடுத்து வைப்பதுமல்லாமல் அதைச்சுற்றிலுமுள்ள எல்லாகருவி கரணங்களையும் தன் மயமாக்கி அது கொண்டுற்றவனுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்திவிடும். இதனுனே "ஆறுவது சினம்" என்றும் "சினத்தைப்பேணிற் றவத்திற்கழகு" என்றும் ஔவை மூதாட்டியார் கூறியருளினர். இவ்வுபதேச உண்மைகளைக் கவனிக்கின் மேற்கூறிய விஷயங்கள் தெற்றெனவிளங்காமற் போகா. ஆறுவது சினம் என்றதில் தணியத்தகுவது தணித்

துக்கொள்ளவேண்டியது சினம்-கோபம் என்றார். இதைத் தேடியமைத்துக்கொண்டால், மற்றெல்லா நன்மைகளும் தாமாகவந்து குடிகொள்ளுமென்பதில் யாதும் ஆட்சேபமின்றாகையால் அவ்வாறு கூறியருளினார். ஆத்திச்சூடியில் ஆறுவது சினம் என்று உபதேசித்ததோடமையாமல் கொன்றைவேந்தனில் மீட்டும் "சினத்தைப்பேணிற் றவத்திற்கழகு" என்று கூறியருளினார். கோபத்தைக்காத்தலே ஒருவன் செய்யுந்தவத்திற்கு அழகாம் என்றார். ஏனெனில்? சினத்தைத்தலையெடாமல் காத்தால், தானும் இன்புறுவான், தவமும் வளர்ந்தோங்கும் என்றும், அப்படிக் காப்பாற்றாவிடில் தான் துன்புறுவதல்லாமல் தவமும் அழிந்துவிடும் என்றும் காட்டியருளினார். கோபத்தை விட்டொழித்தல் தவங்கைக் கொண்டார்க்கு அவசியமாயமைந்த கடமையாகையால் இவ்வொன்றைப்பற்றி இவ்வளவு வியாக்கியானஞ்செய்ய வேண்டியதாயிற்று.

மெய்-அதாவது வாய்மையைக் கடைப்பிடித்தலும் தவத்தின் வழியதாயமைத்துக் கூறப்பட்டது. வாய்மை யொன்றையே கடைப்பிடித்தொழுகின் வேறெவ்வித தவமும் செய்யவேண்டுவதில்லை. இதை நாயனார் மிக்க வற்புறுத்தலோடு கூறியுள்ளதை இந்தச்சந்தர்ப்பத்தில் கவனித்துப்பார்க்கவேண்டும்.

> பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று.

இதுவே அப்பெரியாரின் உபதேசம். இதைப்பன்முறையும் சிந்தியுங்கள். பொய்யாமை யென்னும் வாய்மையை ஒருவன் கைப்பிடித்து நின்றால் அவன் வேறு எவ்விதமாகிய தவமும் செய்யவேண்டிய அவசியமில்லாததாகும். வாய்

மையென்றால் சத்தியம். அதாவது பொய் பேசுதலை யொழித்து நிற்றலாம். பொய் பேசுபவனுடைய உள்ளம் மாசு படிந்ததாயிருக்கும். அங்கு நல்லெண்ணங்கள் உதிக்கமாட்டா. மேலும் பொய் பேசுந்தொழில் அது செய்பவனையும் பிறனையும் கெடுத்துநிற்குந் தன்மையுடையது. இக்காரணங்கள்கொண்டே வாய்மையை மானதம் என்னும் தவத்தின் பாற்சேர்த்தனர். வாய்மையானது ஒருவனுடைய மனதில் குடிகொண்டிருக்குமேல் அவன் மனதில் தோன்றும் எல்லா விஷயங்களும் நன்மையைச்சார்ந்தனவாகும். அவ்வெண்ணங்களின் பயனாகச்சித்திப்பனவும் நன்மையுடையனவாகுமாகையால் அது தனக்கு மாத்திரமேயன்றி பிறருக்கும் நன்மைபயப்பதாகும். ஏவம் எப்பொழுதுமே அது புரிந்தார்க்கு நன்மை செய்துவைக்குமாகையாலும், அது புரிதற்கு மற்றெல்லாவற்றைப்பார்க்கிலும், மனத்தூய்மை வேண்டுமாகையாலும், அத்தூய்மை வாய்மையினால் மாத்திரம் உண்டாகுமாகையாலும், வாய்மையை ஒவ்வொருவரும் கையாள வேண்டிய தவசியமாகும்.

3571

இனி; சிவனை மோனமுறத்தியானித்தல் என்றார். சிவன் என்றதை யாதொரு மங்களகரமாய் விளங்குறும் பரம்பொருளென்றே கொள்ளவேண்டும். அத்தகைய பரம்பொருளை மனதில் சதா சிந்தனை செய்துறவேண்டும். ஈஸ்வர வழிபாடு ஒவ்வொருவரும் செய்யவேண்டியது கடமையாக வமைந்துள்ள போதிலும், அறியாமையாலும் அகம்பாவத்தினாலும் தீயோர் கூட்டுறவினாலும், தீ நெறியுட் பிரவேசித்துற்றலாலும், அது செய்யாதொழிய நேரிடுகிறது. ஈஸ்வரத்தியானம் செய்தால்-ஒவ்வொருவரும் தந்தமக்கு அமைந்த கடமையெனப்பாவித்துச்செய்து வந்தால்-மேற்கூறிய அறியாமை முத

வியன மனத்துள் வந்துபுகுந்த விடந்தெரியாமல் போய்விடும். ஈஸ்வர வழிபாடு செய்யாதோர்களையே அக்குணக்கேடுகள் வந்து பிடிக்குமேயொழிய அவர் பால் பற்றுடையவர்களை யன்று. அப்படி வழிபாடு செய்யும்பொழுதும் மோனமுறச் செய்யவேண்டும் என்றனர். அவ்வகை செய்தலே நிஷ்காமிய பக்தியாகுமாகையால் இவ்வண்ணங்கூறினர். ஒன்றையும் விரும்பாது வழிபாடுசெய்தலே கடமையென உணர்ந்து மனதை விரியவிடாமல் குவித்து, அதாவது ஒரு மனப்பட்ட சிந்தையுடன் தியானித்தலே கிரமமாம். நம்முடைய கிரியைகளில் கிரமந்தவறாது நடந்துவருவமேல் அவைகளுக்குத்தகுந்த பயன் தாமாகவே சித்திப்பது நிச்சயம். அப்பயனையாக்கி வைப்பதற்கு எங்கும் வியாபித்துநிற்கும் பரம்பொருள் ஒருவர் உள்ளாராகையால் நாம் செய்யவேண்டுவதெல்லாம் மேற்கூறிப்போந்த நன்னெறிகள் வழிநிற்றலும் ஈஸ்வரவழிபாடுமாம். இவ்வழியில் தியானித்தல் மாத்திரமே தவமென்றதனால் மற்றுவேறு விதங்களில் தியானித்தல் அவம் ஆகும்? அதாவது தவமல்லாததாம். இவ்வழியாய்த்தியானம் செய்வதற்கு இன்னது வேண்டுமென்பதைக்காட்டுற ஐந்தடக்கல் என்பதும் மானத தவத்தையொட்டியதாம் ஆகவே அதுவும் அமைந்துறவேண்டு மென்றனர் (மஹான் பரஞ்சோதிப் பெருமான் நம்முடைய நன்மையைக்கருதி பரோபகாரசிந்தையுடன் எவ்வளவுசுலபமாயும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டியுள்ளார் கவனியுங்கள்.) ஐந்தடக்கல் என்பது யாதெனிலோ ஐந்துபுலன்களாகிய மெய், வாய் கண், மூக்கு, செவி, என்று சொல்லப்பட்ட புலன்கள் தாம் சென்றவழியே நாம் செல்லாமல்—அவைகளையெல்லாம் நம்முடையவழியில், கிரமமார்க்கத்தில்கொண்டு செலுத்தவேண்டும் என்பதாயிற்று. மேலோர்களெல்லாம் ஈஸ்வரவழிபாட்டிற்கே இக்காரணங்களெல்லாம்

அமைக்கப்பட்டனவென்று கூறியுள்ளார்கள். அதனோடு நம்முடைய சரீரவளர்ச்சிக்கு வேண்டியதைத் தேடியமைத்துக்கொள்ளவும், அவ்வகையில் தேடியமைத்துக் கொள்ளக் கூடாதவர்களாயிருக்கும் அவயவ ஹீனர்களுக்கும், தம்மையே யண்டியுள்ள பெரியோர், மனைவி, மக்களுக்கும், உண்டி, உடை அளித்தற்குமே அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நந்நோக்குகளுடன் அமைக்கப்பட்டபுலன்களை அவ்வழிகளில் மாத்திரம் நெறிதவறாது செலுத்தவேண்டும். இவ்வுண்மையை யுணராது புலன்கள் ஒவ்வென்றையும் அதுவது செல்லும்வழியில் விட்டுவிடுவோமேயானால் முதல்முதலாக நமக்கு விதிக்கப்பட்டகடமையிலிருந்து தவறிப்போனவர்கள் ஆவதுமல்லாமல் மனதைக்குவித்து ஈஸ்வரத்தியானஞ்செய்யவும் அமையாதவர்களாவோம். இதனால் வருப்பயன் இம்மையில் பலவித துன்பங்களுக்காட்பட்டுழல்வதுமல்லாமல், பரத்திற்கும் பாத்திர மற்றவர்களாவோம். புலன்களை யடக்காவிட்டால், அவைகள், மனதைத் தம்வயமாக்கித் தம்முடைய போக்கில் கொண்டுபோய்விடும்; பிறகு அங்கு வாய்மை தங்காது, தருமம், தானம் இயற்றவமையாது தயவு, பொறை கண்காணுதனவாகும். இவையெல்லாவற்றையும் இழப்பதுமல்லாமல் மானிடருக்கு இன்றியமையாததா யிருந்துறுவதாகிய ஈஸ்வரவழிபாட்டையும் போக்கிக்கொண்டவர்க ளாவோம் முற்கூறிய காரியங்களைக் கைக்கொள்ளாது போனதனால் இகத்தில் மனித சமூகத்தாரால் ஒதுக்கப்பட்டு, அதனால் ஒவ்வொருவரும் விருப்புகொண்டுலவும் இகலோகவின்பத்தை இழந்துகொள்ளுவதுமல்லாமல் பின்னற்கூறிய சிறந்தகாரியத்தைப் புரியாதொழிந்ததால் பாத்திற்கும் பாத்தியமற்றவர்களா

வோம். இக்காரணங்களை முன்னிட்டே, "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று ஔவை மூதாட்டியார் மிக்கவற்புறுத்தலோடு வெகுகண்டிதமாய்க் கூறியருளினார். மனம் குரங்கென்றும், அதை யடக்கி யாளாதவிடத்து தன்போக்கில்போகுமென்றும் மற்றபெரி யோர்கள் கூறியிருப்பதும் இதுகாரணங்கொண்டே. மனம் தன் போக்கில் போகாதிருப்பதற்கு ஐம்புலன்களையும் அடக்கியாளவேண்டும். கண்கள், அவை முக்கியமாய்ப் பார்க்கவேண்டிய விவகாரங்களைப் பார்ப்பதைத் தவிர்த்து வேறெதையும் காணாதவிதமாய் அடக்கியாளப்பட்டும், அவ்வாறே மற்ற ஒவ்வொரு புலன்களும் அதனதன் முக்கிய தொழில்களில் பிரவேசிக்கவிடப்படுவது மாத்திரமே யல்லாமற்படிக்கு மற்றெல்லா சமயங்களிலும் அடக்கியாளப் படுந்தன்மையில் வைக்கப்படவேண்டும். இவ்வாறு செய்தால் அவைகள் மனதைத் தம்போக்கில் இழுத்துச் செல்லா. அவைகளால் இழுத்துச்செல்லப்படுவதால் விரிந்து கிடக்கும் மனம் அவைகள் அடங்கி நிற்குமேல் குவிந்த தன்மையையடையும். இத்தன்மையடையவே மனம் மோனமுறத்தியானத்தற்கு ஏதுவாகும். ஆகையினாற்றான் ஐந்தடக்கல் என்பதும் மனதோடு சம்பந்தப்பட்ட காரியமாயிருக்கவே, அதையடக்கவேண்டுமென்றும், அவ்விதம் அடக்கல் மானதம் எனும் தவத்தளவாயினதென்றுங் கூறியருளினார்.

இனி, வாசிகம் என்பதென்னெனிலோ அது வாயினால் செய்யப்படும் தொண்டாகும். வாய்கொண்டு இயற்றப்படுங்காரியம் நன்மை யுடையதாகவே யிருக்க வேண்டும். புலன்கள் ஐந்தில் வாய் பெற்றிருக்கும் அதிகாரம் அளவு கடந்ததாகும். அதனால் பிறருக்குச் சகாயம்

புரியவும்முடியும் அபாயமுண்டாக்கவும் யேலும். நியாயத்தை நாட்டவும் முடியும். அநியாயத்தை நீட்டவுங்கூடும். பூசனை புரியவுமாகும். ஏசுகை சொல்லவுமியலும். ஆகாதகாரியத்தை ஆக்கிவைக்கவும் அதனாலமையும். ஆகுங்காரியத்தை யழித்து வைக்கவுமதனால் கூடும். இவ்விதமெல்லாம் நன்மை, துன்மை ஆகிய இரண்டும் அதனால் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறபடியால், வாய்கொண்டு செய்யக் கூடியதெல்லாம் நன்மையுடையனவாகவே யிருக்கவேண்டும். மனத்தொண்டை ஒருவன் கடைப்பிடித்து ஒழுகுவானேயானால் வாய் என்னும் புலனும், மற்ற நான்கு புலன்களும் அடக்கியாளப்படும். வாயையடக்கியாளாதவன் பலதீங்குகளுக்குட்படுவான் என்பதை நாயனார் எவ்வளவு நேர்த்தியாக இதோபதேசித்துள்ளார் நன்கு கவனியுங்கள்.

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு

ஒருவன் எதைக்காப்பாற்றிக் கொள்ளா விடினும் "நா" வாயைமட்டிலும் வெகுஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள்ள முயலவேண்டும். யாதுக்கெனில், தன்னுடைய "நாக்கு" வரம்புகடந்து போகாதிருக்க வழி தேடிக்கொள்ளவேண்டி அப்படிச் செய்து கொள்ளாமற் போனால் பிறரால், தன்னுடைய சொல்லில் குற்றங் கண்டுபிடிக்கப்பட்டு கஷ்டப்படுத்தப்படுவான் என்பது என்ன உன்னதமாகிய போதனையாயிருக்கிறதென்பதை மிகவுங்கவனியுங்கள்.

ஆனதுபற்றி, மனத்தொண்டை ஒருவன் கைக்கொண்டால் "வாய்" என்னும்புலன், வரம்புகடந்து போகாமற்படிக்குக் காப்பாற்றப்படும். இவ்வண்ணஞ்செய்யப்பட்டபின்

வாயைக்கொண்டு பரத்திற்குகந்த பொருளைச் சம்பாதித்தல் வேண்டும். அதைச்சம்பாதிப்பது எவ்வழியாலென்றால்? ஐந்தெழுத்தோதல், மநு, பஞ்சசாந்தி, மறைபேசு சதவுருத்திரந் தோத்திர முறைத்தல், பெருந்தருமம் காசகலவெடுத்தோதல் முதலியவற்று லென்றார்.

ஐந்தெழுத்தோதல் என்னெனின்? ஐந்தெழுத்தென்பது, "ஸ்ரீபஞ்சாட்சரம்" இவ்வரியபஞ்சாட்சரத்தை இடைவிடாது சதா வாயினால் ஓதிக்கொண்டிருத்தல். தனக்கேற்பட்ட தொழில் முயற்சியில் பேசவேண்டியிருக்கும் சமயத்தில்மாத்திரம் உச்சரிப்பதைத்தவிர்த்து, மற்றெல்லா சமயங்களிலும் ஸ்ரீபஞ்சாட்சரத்தையோ, அல்லது மற்ற சமயத்தார்களுக்கேற்பட்டுள்ள திருமந்திரங்களையோ, "ஓம்" என்னும்பிரணவத்தையோ, அல்லது நம் பரம்பொருளின் திருநாமங்களிலொன்றையோ, சதா உச்சரித்துக்கொண்டேயிருந்தால் வேறு வீண்விவகாரம் பேசவோ, பிறரைத்தூஷிக்கவோ, பிறருக்குக் கேடுவிளைந்துறுவதாகிய விஷயங்களைப் பேசவோ முடியாதுபோம், இதனால் இகத்திலே நல்லவனென்கிற பெயர் எடுப்பதுமல்லாமற்படிக்கு, பரத்திற்கும் பாத்திரமுடையவனுவான். மநு என்பது, பஞ்சப்பிரம மஹாமந்திரம். பஞ்சசாந்தியாவது சிவபெருமானே பொருளெனக்கூறும் உபநிடதபாகங்கள். மறைபேசு சதவுருத்திரம் என்பது வேதங்கள் கோஷிக்கும் சதவுருத்திர மனுக்கள் ஆகிய இவைகளைக் கூறுதல் கிரமமாம். பெருந்தருமங்காசகல வெடுத்தோதல் என்பது பெரிய தருமநூற்கள், அதாவது அறநூற்களைக்காசகல குற்றமில்லாமற்படிக்கு அதாவது கசடற எடுத்துப் பிறருக்கு உபந்நியஸித்தல் என்பதேயாம். ஆகவே, வாய்கொண்டு செய்யவேண்டுவதெல்லாம், பிறருக்கு நன்மையுண்டு

பண்ணுவதாகிய விஷயங்களைப்பேசுதலும், பிறருக்கு உதவி புரிதலும், தன்னுடைய சொந்த விவகாரமுறையில் பேசவேண்டியதற்கதிகம் பேசாமல் காப்பாற்றலுமாகிய இவையெலாஞ் செய்து, பிறகொழிந்த மற்றெல்லாக்காலங்களிலும், ஈஸ்வரனுடைய நாமத்தை உச்சரித்தலும், அவருடைய புகழையெடுத்துப்பாடுதலும், பிரசங்கித்தலுமாகிய இன்னோரன்ன நற்கிரியைகளையே செய்யவேண்டும். வாய், மனதிற்கு அடிமைத் தன்மையுடைய தாகையினாற்றான் வாய்மையை மனதுடன் சம்பந்தப்படுத்தி மானதம் என்னும் தவத்துடன் பேசினார். மனம்போனபோக்கில் வாய் அல்லாமற்படிக்கு மற்றெல்லா புலன்களும் செல்லுமாகையால் மனதை முதற்கண் அடக்கியாளவேண்டுமென்றார். மனம் தூய்மை யுடையதாயிருக்க வாய்மை யவசியமானதென்று காட்டியபடியால், வாய்க்கு மனதையன்றி தனியதிகாரமில்லையென்றேற்படுகிறது. ஆகவே முதற்கண் மனத்தொண்டை ஒருவன் கைக்கொண்டு பிறகு வாக்குத்தொண்டையுங் கடைப்பிடிக்கவேண்டும்.

இனி காயிகம் என்பது காயத்தொண்டு அதாவது சரீரத்தைக்கொண்டு புரியும் தவமாகும், முதல் மனதை நல்வழியிற் கொண்டுசெலுத்தி நல்லெண்ணங்கள் உதிக்கவும், அத்தகைய வெண்ணங்கள் காரணமாக பிறருக்கு நன்மைகளையே புரிந்தும், ஐம்புலன்களையும் மனம் போனவழியில் விடாமற்படிக்கு யடக்கியாண்டு ஒருமனப்பட்ட ஈஸ்வரத்தியானஞ்செய்தும், அதன் பிறகு வாய்கொண்டு பிறருக்கு நன்மையேபுரிந்து ஈஸ்வரப்பிரார்த்தனை, உபந்நியாஸம் முதலியன செய்தும் பிறகு காயத்தினலாயகாரியஞ்செய்யவேண்டும். காயத்தினற் செய்யக்கூடிய காரியங்கள் இன்னவையென்று கூறவந்தவிடத்து, ஈசனருச்சனை, கோயில் வலஞ்செய்கை, எதிர்வணங்

கல், நிருத்தனுறைபதிபல போய்ப்பணிதல், பணிநிறைவேற் றல், திருத்தன் முடிநதியாதி தீர்த்தயாத்திரைபோய் மெய் வருத்தமுறவாடல் இவை முதற்பல என்றனர்.

முன்னமே கூறியதுபோலவும் மற்றெல்லாப் பெரியோர்கள் கூறியதுபோலவும் மானிடர் பெற்றிருக்கும் ஒவ்வொரு அங்கமும் பகவானுடைய பணிவிடையி லீடுபடுத்தற்பொருட்டே என்னும் கொள்கைப்பற்றி காயிகம் என்னுந்தவத்தில் அவர்கள் செய்யவேண்டியகிரியைகள் இன்னவென்பதை யெடுத்து வெளியிட்டனர். ஈசனருச்சனை செய்யவேண்டுமென்றார். முன்பு மனங்கொண்டு செய்யவேண்டுவது ஈஸ்வரத்தியானமென்றும், பிறகு, வாய்கொண்டு செய்ய வேண்டுவது ஈஸ்வரனைநோக்கிய பிரார்த்தனை யென்றும், சொன்னதுபோல இங்கே காயிகமென்னுந்தவத்தில் கரங்கள் செய்ய வேண்டுவன ஈசனருச்சனை யென்றார். இக்கைங்கரியத்தில் கரங்கள் ஈடுபெற்றுநிற்குமேல் வேறு தீயகாரியங்களைப் புரிய அவைகள் விரைந்துசெல்லா. வாயைப்போலவே கரங்களும் நன்மையான கிரியைகளையு மியற்றக்கூடும், துன்மையான கிரியைகளையும் புரிதற்கூடும். ஈஸ்வரவழிபாட்டில் அவைகளைப் புகுத்திவிட்டா லவைகள் பிறகு யெந்தத் தீயவழியிலும் பிரவேசிக்கா. அவ்விதம் பிரவேசிக்க நேரிடினும் அதுகாறும் புரிந்துற்ற ஈசனருச்சனையாகிய நற்காரியம் இடைநின்று தடுக்கும் தேகத்தின் கரணங்கள் புரியவேண்டுவன வெல்லாம் பிறருக்கு நன்மைகளையே. பிறருக்கு நன்மையேபுரிந்துவந்தால் அது புரிபவனாகிய தனக்கே அந்நன்மை கட்டாயமாய்ச் சித்திக்கும். இதில் கிஞ்சிற்றுச் சந்தேகமுங்கிடையாது. உதர போஷக நிமித்தம் நமக்கமைந்துள்ள கைகளைக்கிரமவழியில் பிரயோகித்து, பிறகு பிறரதுநன்மையைக்கோரி அவர்களுக்கு

உதவி புரியவேண்டுமென்கிற ஒரே நல்லெண்ணங்காரணமாக அவைகளையுபயோகப்படுத்தி, ஒழிந்தமற்றெல்லா சமயங்களி லும் ஈசனருச்சனையிலேயே அவைகளைக்கொண்டு செலுத்த வேண்டும். இவ்விதமாகிய கைகளையும், வாயிகமென்னுந் தவத்தைவிளக்கியபோது எடுத்துக்காட்டிய தன்மையிலமைந் தவாயையும் பெறுதமானிடர்களைப்பார்க்கிலும மனிதர்களைப் போன்ற தோற்றத்தைப்பெற்று, வனத்திடையுழலும் குரங்கு நல்லமிருகமாகும் என்றனர் பிரபுலிங்க லீலையுடையார்.

பூசனை செயாதகை புராந்தகன்புகழ்
பேசுத லிலாதவாய் பெற்றுழன்றிடும்
நீசரா னவர்தமில் நெடுவனத்திடை
கூசுத லிலாத புன்குரங்குநன்றரோ.

இதைக்கவனித்தாகிலும் நம்முடைய கைகளும், வாயும் இன்ன நற்காரியத்தில் பிரயோகப் படுத்தவேண்டுமென்பதை யறிந் துணரவேண்டாமா?

பூக்கைக் கொண்டரன் பொன்னடி பூசியார்
நாக்கைக் கொண்டரன் நாமநவில் கிலார்
ஆக்கைக் கேயிரை தேடிய லமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

என்று ஸ்ரீ வாகீசப் பெருந்தகையாரும் உபதேசித்தருளினர் தேகவுருப்பில் மற்ற அவையங்களை யெடுத்துக்கொள்ளாமல் வாய், கையென்னும் இரண்டைமாத்திரம் யெடுத்துக்கொண் டதின்காரணம் ஆழ்ந்து கவனிக்கத்தகுந்தது. இவ்விரண்டி னாலும் பிறருக்கு நன்மையையுஞ் செய்யமுடியும், தீமையையு மியற்றமுடியும். அவைகளினால் தனக்கு முறையே நன்மை

யையும் துன்மையையும் தேடிக்கொள்ளுகின்றவனுகிறுன். ஆகையினுற்றுன் தொழில் முயற்சியிலுற்றகாலம்போக—அக் காலத்தில் வேறு விவகாரத்தில் வாயும், கையும் பிரவேசிக்க முடியா. மற்றெல்லா சமயங்களிலும் ஈஸ்வரனுடைய அருச் சனையிலும் அவருடைய நாம வுச்சரிப்பிலும் செலுத்தவேண் டுமென்றுர். அப்படிச் செய்கிறவர்களே இகத்திலுற்றவரை யில் யாதொருமனச்சங்கடமு மில்லாமல் வாழ்ந்துற்று பரத் திலும் மேலானபதவி பெருபவர்களாவர் என்பதைக் காட் டாமற்காட்ட மேற்கூறியாங்கு செய்யாதவர்கள் எத்தகையோர் என்பதைக் குறிக்குமிடத்து "ஆக்கைக்கே யிரைதேடியலமந்து காக்கைக்கே யிரையாகிக் கழிவரே" என்றனர். அதாவது தம்முடைய வாழ்நாளளவும் மெய் யென்று வுபசார வழக்கில் சொல்லப்படும் பொய் யாகிய சரீரத்திற்கு நல்லவழி யில் மாத்திரமல்லாமற்படிக்குத் தீவழியிலும் பொருள் சம் பாதித்து இட்டு, பரத்திற்குவேண்டிய பொருளைத்தேடாது போனதினுல் கடைநிலையில் யேமாப்புற்று அப்பொழுது பச்சா தாபப்பட்டும் பயனில்லாதுபோய், காக்கை, கழுகு முதலிய பறவைகளுக்குத் தன்னுடைய பொய்க்கூரையை, அதுவரை யில் மெய்யென்று பிராந்திகொண்டு காப்பாற்றிவந்த வுடலை யிரையாக்கிப் போடுவார்கள் என்ற உண்மைவாசகத்தைப் பலகாலும் ஓதி யுணரவேண்டும்.

பிறகு கோயில்வலஞ்செய்கை, யெதிர்வணங்கல் முதலி யனவாகிய நற்கிரியைகளைக் காயத்தின்பாற் படுத்திக்கூறினுர். ஆன்மாவை லயிக்கச்செய்யக்கூடிய இடம் ஆலயமென்னும் கோவில். கோவிலாகிய அவ்வாலயத்திற்குச் சென்றுல் அங் கேயிருக்கும் ஸ்தூலமாகிய கடவுளினுருவத்தைக் கண்டு எதிர் வணங்கினுல் தேகத்தில் காணக்கூடாததாயுள்ள அறிவாகிய

சிவலிங்கம் பரிபக்குவப்படுத்தப்படும். இக்காரணத்தினலும், மோக்ஷமென்று கருதப்படும் உயர்ந்த ஸ்தானத்தையடைய ஏற்படுத்தப்பட்ட படிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளும் இவைகள் ஒவ்வொன்றிலும், நான்கு கலந்துற்ற பதினறுபடிகளேயும் கடப்பதற்குங் கோவில்வலஞ் செய்கையும் எதிர் வணங்குதலும் அவசியமாகும்.

அதன்பிறகு நிருத்தனுறை பதிபலபோய்ப் பணிதல் யென்ருர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்திக்கு இயன்ற வளவு, எனவே தேகசக்திக்கும், பொருளமைப்புக்கும் பொருந்த, தம்முடைய சொந்த வூரையல்லாத வேறிடங்க ளுக்குப்போகவேண்டுவது அவசியமாகும். அப்படிப்போதல் ஈஸ்வரவழிபாட்டைச் சார்ந்ததாயிருக்கவேண்டு மென்றனர்.

முதலாவதாகத் தன்னுடைய ஊரையும், தன்னுடைய நாட்டையுந் தவிர்த்து வேற்றூருக்கு, வேறு நாட்டுக்குப் போகாதவன் கிணற்றுவாசமுற்ற தவளேக்குச்சமானமானவ ஞவான். அத்தகையோன் உலகானுபவத்தைப்பற்றிப் பேசு வது கரையில்லாததாய்ப் பரந்து விளங்கும் கடலாமைக்குக் கிணற்று ஆமை தன்னுடைய அநுபவத்தை யெடுத்துக்கூறிய தையொக்கும் இதை நாம் அனுபவபூர்வமாய்க் கண்டறிய லாம். தன்னுடைய ஊரிலேயோ அல்லது நாட்டிலேயோ உள்ளவனுக்கு உலகஞானம் மிகக்குறுகிய தன்மையிலிருக்கும்- அவனுடைய எண்ணங்களும் அபிப்பிராயங்களும் அப்படியே யிருக்கும். தன்னுடைய வூரைக்கடந்து வேறுபல வூர்களேப் பார்த்து வந்தவனுக்கும், வேறுநாடு சென்றுவந்தவனுக்கும் உள்ள அறிவையும், யெண்ணங்களேயும் நோக்குங்கால் விரிந்த தன்மையினவாகவே யிருக்கும். காரணம்யாதெனில், பலதே

சத்துவழக்க வொழுக்கங்களைக் கவனிப்பதனலேயாம். ஆகையினுற்ருன் உலகஞானம் பெறுவதற்குப் பலவேறு ஊர்களுக்கும், நாடுகளுக்கும் போவது அவசியமாகக் கருதப்பட்டுப் பிற நாட்டார் தம்மக்களுக்குத் தேசயாத்திரை யென்பதைக் கட்டாயமுறையா யமைத்துள்ளார்கள். நம்முடைய நாட்டிலும் இவ்வழக்கம் முன்னிருந்த தென்பதற்குத் தொன்மையான நூற்களில் பலவித ஆதாரங்கள் இருப்பதுமல்லாமல் எடுத்துக் கொண்ட இந்த வியாஸத்திலும் நிருத்தனுறை பதிபலபோய்ப் பணிதல், காயிகம் யென்னுங் காயத்தினல் செய்யவேண்டிய தவத்தின்பாற் படுத்தப்பட்டதைக் கவனியுங்கள்.

நம்மனோர் நோக்கமெல்லாம் இகத்துக்கும், பரத்துக்கும் பொருந்தியன வாகையால் வேற்றூர் பல போவதனல் உலக ஞானம் பெறுவதல்லாமல் ஆங்காங்கு யெழுந்தருளியுள்ள பிரானரின் அநேகத்திருக்கோலங்களைக்கண்டு உன்னுடைய வாய்கொண்டு பதிகம்பாடித் துதித்தும், கைகள் கொண்டு அருச்சனை புரிந்தும் வருவாயேல், பரத்திற்கும் பாத்தியமுற்றவனவாய் என்று சொல்லியதாயிற்று.

பணி நிறைவேற்றல் யென்ருர். இது அபாரமாகிய அருத்தத்தைக் கொடுக்கக்கூடியதாகும். அஃதென்னெனின், அவரவர்களுடைய பொருளுக்கு அமையவோ, சரீரதிடத்திற்கு யேலவோ திருப்பணி, அதாவது கோயில், மடம், தடம், கட்டல், முதலியவைகளை யமைத்தோ, அல்லது அவ்விதஞ் செய்ய முடியாதவர்கள், பெரியோர்களால் கட்டப்பெற்ற கோவில்களில் அலகிடல், திருவிளக்கேற்றுதல், பூத்தொடுத்தல், நந்தனவனங்களுக்கு தண்ணீர்ப்பாய்ச்சல், பூக்கொய்தல் சுத்தப்படுத்தல் முதலிய தொண்டுகளைச்செய்தோ வரவேண்டு

மென்று ஒருவாறு சுருக்கிக்கூறலாம். இப்பிரிந்தியவகையினால் தேகத்திற்கு ஒருவிதப் பயிர்ச்சியேற்பட இகத்தில் பிணிவயப் படாமல் இருக்கவமைவதுமல்லாமல் பரத்திலும் நற்பேறுபெற வழியுண்டாகும்.

இனி திருத்தன் முடி நதியாதி தீர்த்த யாத்திரைபோய் மெய்வருத்தமுறவாடல் என்றார். அஃதாவது பலபுண்ணிய நதி தீரங்களுக்குச் சென்று ஸ்நாநஞ்செய்வதனால் தேகத்தின் வெளிமாசும், மனதினுடைய உள்மாசும் நீக்கப்படும். முன்னமே யாத்திரையின் பலனைப்பற்றிக் கூறிவிட்டோம். ஆயினும், அவ்விஷயங்களை இங்கும் அமைத்துப்பார்த்துக் கொள்ளவேண்டியது. வெளிமாசு நீக்கப்படுவதால் சரீர சுகமேற்பட இகத்தில் பிணியற்றவாழ்க்கை யடைந்திருந்து மனமாசு கழுவப்படுதலால் பரத்திலும் உயர்ந்தபேறு பெறவமையும்.

3511

இனி முன்னர்க்கூறிய நிருத்தனுறை பதிபலபோய்ப் பணிதல், பணிநிறைவேற்றல், திருத்தன் முடிநதியாதி தீர்த்த யாத்திரைபோதல் ஆகிய இந்த மூன்றுகாயிகங்களாலும் மெய் வருத்தமுறும். அவ்வாறுவருத்த முறுவதால் இகத்தில் பிணியற்ற வாழ்க்கையையும் பரத்தில் உயர்ந்தபேற்றையும் பெறவமையுமென்று கூறினோம். இக்காரியங்களினால் மெய வருத்த முறுதலுக்கு விசேஷநோக்க மொன்றுண்டு.

> உற்றநோய் நோன்றலுயிர்க்குறுகண் செய்யாமை
> யற்றே தவத்திற் குரு.

என்ற பொய்யாமொழியாருடைய உரையைக்கவனிக்கின் இது விளங்குறும். தவத்திற்கு உருவு, தவத்தின்வடிவு, உண்டி சுருங்கல் முதலியவற்றால் தம்முயிர்க்குவரும் துன்பங்களைப் பொறுத்தும் தாம் பிறவுயிர்களுக்குத் துன்பஞ்செய்யாமையு

மாகிய அவ்வளவாயிற்று என்றனர். ஒருவன் தன்னுடைய வீட்டிலிருந்துகொண்டு வேலைதவராமல் நன்றாகப் புசித்து வருவானேயானால் அவனுக்கு உலக அனுபவந்தெரியவராது, பிறருடைய கஷ்டம், அதிலும் ஏழைமக்களுடையதுன்பம் இன்னதென்பதையுணரான், பிறஜீவன்களுடைய தன்மையும் அறியான். உலகத்திலுள்ள அல்லது தன்வசமுள்ள எல்லாம் தனக்கே உரித்தானதென்று நினைப்பவனாவான். அத்தகை யோன் யாதொருதொழிலும் புரியாமல் அறைவாசமுற்றுள்ள படியால் தன்னுடைய அவயவங்கள் யாதொருதொழில் முயற்சியிலும் ஈடுபடுத்தப்படாமையினால் தடிப்பெய்தி சரீரக்குறைவைக் கொண்டுவந்து சேர்ப்பதுமல்லாமல் மனதில் நல்லெண்ணம் உதிக்காமற்போய் இதனால் ஈஸ்வரவழிபாடு முதலிய நற்காரியங்களைப்புரியாமல் பரத்திற்கும் பாத்தியமற்றவனாவான். ஆகையினாலேயே ஒவ்வொருவரும் இக்காயிகம் என்னும் தவத்தில் கூறப்பட்டக் கருமங்களைப் புரிய வேண்டுமென்றனர். வெளியே யாத்திரைசென்றகாலையில் வேலைதவராமல் உண்டி கிடைக்காதாகையால், அப்பொழுது பலவிதமான ஞானமுதயமாகும். "ஆ! உண்டியில்லாவிட்டால் பசியின்கொடுமை இத்தகையினதா யிருக்கிறதல்லவா? வயிற்றுச் சோற்றிற்கு வழியில்லாம லிருக்கும் ஏழைகள் இவ்விதந்தானே துன்புறுவார்கள். உலகத்தில் தோன்றிய மானுடர்களில் எல்லோரும் ஒரேவகையி லில்லாமற்படிக்கு சிலர் பணக்காரர்களாகியும், சிலர் ஏழைகளாகவும் இருப்பதற்குக்காரணமென்ன? என்னும் யோசனைகள்பிறக்கும். போதும், இந்த யோசனைகள் தோன்றினால் போதும். பிறகு அதன் காரணத்தையறியப்புகுவான். 'ஓஹோ முன் ஜன்மத்தில் ஈஸ்வர வழிபாடுகளாகிய நற்கருமஞ் செய்தவர்கள்தாம் இப்பவத்தில் நல்வாழ்க்கையுற்றிருக்கிறார்கள். அவ்விதஞ்செய்யாது விடுத்தவர்கள் பலவித

சங்கடமுற்ற வாழ்வைப்பெற்று வருந்துகின்றார்கள். அந்தோ! என்ன மோசம்போய்விட்டோம்! நாம் இதுகாறும் ஈஸ்வர வழிபாட்டில் ஈடுபடாமல் பலவருடங்களை வீணாய்ப்போக்கிவிட்டோமே!" என்கிற யோசனைகள் வந்துற்றபோது, உடனே ஞானவானாகிறான். அன்றையத்தினத்திலிருந்தே அவனுடைய மனதில் ஓர்விதபிரகாசமிட்டொளிறுகின்றது. உலகத்திலுள்ள எல்லாம் தன்னுடைய சுகத்திற்கு அல்லது உபயோகத்திற்கு என்று எண்ணியிருந்தவன், அவன் தானே பிறருடைய உபயோகத்தின்பொருட்டு படைக்கப்பட்டுள்ளான்என்பதை உணருகின்றான். அதுவரையிலும் பிற ஜீவன்களுக்குத்துன்பம் இயற்றிவந்தவனா யிருந்தாலும் அன்றையத்தினத்திலிருந்து அவைகளுக்கு நன்மை புரிபவனாகின்றான். உண்டியில்லாதவர்களுக்கு உண்டியுதவியும், உடையில்லாதவர்களுக்கு உடையுதவியும் வருகின்றான். காலை மாலையும்கோயில்வலம் வருகின்றான். பிறருக்கு எப்பொழுதும் நன்மைபுரிய நோக்கங்கொள்ளுகிறான். ஒழிந்த நேரத்தை ஈஸ்வரவழிபாட்டில் செலவிடுகின்றான். காயிகத் தொண்டினால், அதை மாத்திரம் கைக்கொண்டதல்லாமல், மற்ற இரண்டு தவங்களாகிய வாயிகமும், மானதமும், தாமாகவே அவனுக்கு கைவல்யமாய்விட்ட வகையைக் கவனியுங்கள்!. அவனுடைய வாழ்க்கைநிலை இனி இகத்தில் மிக்க சுகமுடையதாக இருந்து பரத்திலும் அவன் நற்பதவி பெறுவானென்பதில் யாதும் ஐயப்பாடுண்டோ கூறுங்கள்!

காயிகம் என்னும் காயத்தைக் கொண்டு செய்யப்படுவதாகிய தவத்தைக்கைக்கொண்டால் மற்ற இரண்டு தவங்களும் தாமாக வந்தமைவுறுதல் சத்தியமாகையால் "பொருத்தமுறுகாயிகங்கள் சிறந்தன இப்புண்ணியத்துள்" என்று பரஞ்

சோதியார் கூறியருளினர். காயத்தினுல் செய்யுந்தவத்திற்கு அரிய சாதனம் ஏதும் வேண்டுவதில்லை ஆகையினுல் இத் தொண்டை லகுவில் கைக்கொண்டால், அதன்பிறகு மனமடக்கல், ஐந்தடக்கல், முதலிய மற்ற தவங்களையும் படிப்படியாகக் கொண்டு சாதித்து முத்தவங்களையும் ஒருங்கே கைவரப் பெற்று உயர்ந்தபயனடைய இயலும். 'சாதனமின்றியொன்றைச் சாதிப்பார் உலகிலில்லை' ஆகையால், முதற்கண் சுலப சாதனத்தைச் சிறு முயற்சி கொண்டுதேடி அதன் பிறகு பெருத்த-அரிய-சாதனங்களைத்தேடிக் கொள்ளலாம். தொடங்கும் பொழுது எந்தக்காரியமும் சுலபத்திலேயே ஆரம்பிக்கப் படவேண்டும் ஆகையினுல்; காயிகமே சிறந்த தவம் என்றார்.

இனி, மேற்கூறிய தவங்கள் மூன்றும் ஒவ்வொருவராலும் செய்து முடிக்கக்கூடிய தன்மையிலிருக்கின்றன வென்பதைக்காட்டினேம். வீட்டைத்துறந்து காட்டிற்கோடவேண்டிய நிமித்தியமே இல்லை. தொழில் முயற்சியில் ஈடுபட்டு நிற்கும். ஒவ்வொருவராலுஞ் செய்து முடிக்குந் தன்மையிலேயே இருக்கக்காண்கிறோம். ஒவ்வொருவரும் இவ்வரிய தவங்கள் மூன்றையும் கடைப்பிடித்து ஒழுகவேண்டுமென்பதே எமது பொருத்தனை. ஆகையால் இவ்வரியதவத்தைச் செய்ய இன்றே தொடங்குங்கள்! எழுந்திருங்கள்!! உங்களால் கூடியவரையில், யாதொரு வஞ்சனையின்றிச் செய்வாருங்கள்!!! இழந்த ஒருநாளை மீட்டும் வரப்பார்க்க மாட்டோம். வழிகளெல்லாம் செவ்வனே எடுத்துக்காட்டப்பட்டும் அவைகளில் செல்லத்தாலும் சோம்பலா யிருப்பீர்களேயானுல் உங்கள் கடமையில் தவறிநடந்தவர்களாவீர்கள். நாமெல்லோரும் அன்னியநாட்டின் வாசமுற்றிருக்கிறபடியால் உலகஞானம் பெற்றிருக்கிறோம். இனியேனும் நம்மையறியாமல்

கெட்ட விஷயங்கள் எவையேனும் நம்மைப்பிடித்திருக்குமேல் அவைகளை உதறிப்போட்டு, மேற்கூறிப் போந்த தவம் மூன் றையுங்கைப்பற்றி இனி நிகழும் இகத்துவாழ்வை இன்ப நலத்துடன் போக்கி இனிவரும் பவத்தில் நற்பேறு பெற வழி தேடுவோம்.

இவ்வெண்ணம் உதித்த இந்தச்சமயத்திலேயே இத்தவங் களைக் கைப்பிடியுங்கள். நல்ல எண்ணங்கள்வெகு அபூர்வ மாகவே தோன்றும். அப்படித்தோன்றும் சமயத்தில் அவ் வெண்ணங்களை உறுதியாகக் கைப்பற்றுமல் இன்னும் நாளைக் குச்செய்வோம் நாளைக்குச் செய்வோம் என்பதாகக் காலந் தாழ்த்த வேண்டாம்.

'இன்றே செய்யவும் வேண்டு மவ்வின்றும்
இன்னே செய்யவும் வேண்டு மவ்வின்னும்
நாளை நாளை யென்பீராகில்
நம்முடை முறைநா ளாவது மறியீர்
நமனுடை முறைநா ளாவது மறியீர்
எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் றமரொடும் போகான்
நல்லா ரென்று னல்குர வறியான்
தீயா ரென்னுன் செல்வரென் றுண்ணுன்
தரியா னொருகணந் தறுக ணாளன்
உயிர்கொடு போவான் உடல்கொடு போகான்
ஏதுக் கழுவீ ரேழை மாந்தர்காள்?'

என்னும் ஆன்றோர் உரையின் உண்மையை அறிந்தும் நம் வாணுளை வீணுளாக்குவது நன்றன்று.

நமக்குள் நல்லெண்ணந்தோன்றிய இந்தக்ஷணத்திலேயே தவத்தைக் கைக்கொள்ளுவோமாக.

"இட்டமிகு மிளமைநல மீரையாண் டதனிலி ருபதினில்
வளர்ச்சியு முப்பது வருடத்தழகு
முட்டகைய மேதையு நாற்பது வருடத்துடலி
லொண்பலமு மைம்பதினி லறுபதிநிற்றுதுந்
திட்டியு மங்கெழு பதினிலெண் பதினிற்
செவியுந் திகழ் மனமுந் தொண்ணூறிற் சிவனு
[நூறளவில்
விட்டகலு மிரவியுதித் தொடுங்குவ தென்
றுணர்ந்தோர் வீணுள்பட் டொழியாமல் விரும்பு
[வர் நற்றவமே."

என்றபடி, தவத்தைப்பார்க்கிலும் கைப்பற்றக்கூடிய சிறந்த பொருள் வேறு இல்லவேயில்லை.

" தவந்தனின் மிக்கதொன்றில்லை தாவில் சீர்த்
தவந்தனை நேர்வது தானுமில் லையாற்
றவந்தனி னரியதொன்றில்லை சாற்றிடிற்
றவந்தனக் கொப்பது தவம தாகுமே."

தவத்துக்குத் தவமே ஒப்புவமை யுடையதன்றி அதைப்பார்க்கிலும் சிறந்தது வேறொன்றுங் கிடையாதென்று பெருநூல்களெல்லாம் முரசறைந்து நிற்பதைக் கவனியுங்கள்.

"தவமேமேலா நெறியாகுந் தவமேசிவனார் தமைக்காட்டும்
தவமேதுறக்க மடைவிக்குந் தவமேநரனைத் தேவாக்குந்
தவமேவலாரி திசைக்கிறைவர் சார்ங்கனயனு மாக்குவிக்குந்
தவமேகிடைப்பிற் கிடையாத துண்டோவென்று சாற்றினர்
[னூல்."

என்னும் காஞ்சிப்புராண உரையை யூன்றி யோசிப்பவர்களுக்கு நாமொன்றும் புதிதாகக் கூறவேண்டிய அவசியமில்லை. தவத்தைக் கைக்கொண்டவர்கள் எல்லாம் பெற்றவர்கள் ஆவார்கள் தவத்தைப்பெருமல் மற்றெல்லாவளங்களையுங்கைப் பெற்றிருந்தாலும், அவைகளெல்லாம் பெற்றவர்களாகார்கள். ஆகையினுல் அரியதாயுள்ள இவ்வொன்றைப்பெற்று அதனுலே எல்லா வளங்களு மமையும்படியான வழியைத்தேடுவோமாக. இறைவனும் இதற்கு அருள்பாலிப்பாராக, ஓம்

சுபம்!

ச. தா. மூர்த்தி.

# கூடா வொழுக்கச் சகோதரன்.

ஓர் நலந்தரு நவீனகம். இரண்டு சகோதரர்களில் நல் வழிபட்ட ஒருவன் அடைந்த மேன்மையும், தீநெறி புகுந்த மற்றொருவன் அடைந்த கதியும் உலகத்தவர்களுக்கு நல்ல ஓர் படிப்பினையாகக் காட்டப்பெற்றிருக்கின்றது. உலக அனுபவஞ் செறிந்த நாவல். ஆரம்பத்திலிருந்து அந்தம் வரையில் ஆச்சரிய ரசம் ததும்பும் புத்தகமாம். இதுவரையில் இம் மாதிரியான நாவல் வெளிவந்தது கிடையாது, நவக்கிரகங் களின் ஆராதனுவிபரமும், அவ்வாராதனையா லுண்டாகும் பலாபலன்களின் உண்மையான விஷயம் இன்னவை யென் பதைப்பற்றியும், இறப்பு பிறப்பு என்னும் சம்பவங்கள் இன் னவை என்பதைப்பற்றியும் சச்சிதானந்த சுவாமிகள் சகோத ரர் இருவரில் ஒருவருக்கு எடுத்து போதிப்பதை ஒவ்வொரு வரும் வாசித்தறியவேண்டியது அவசியமாகும். உண்மைச் சரித்திரத்தோடு உலகானுபவம் ஏற்றப்பட்டிருக்கக்காணலாம். குடும்பத்தில் தவறிநடந்தவர்கள் எவரேனும் உளரேல் அத் தகையோருக்கு இப்புத்தகத்தில் ஒரு பிரதி வாங்கித்தந்தால் நல்வழி படுவாரென்பதில் ஆட்சேபம் ஏதுமின்று. இதன் விலை அதிக சொற்பமாகவே ஏற்படுத்தியுள்ளோம்.

இதன் விலை அணா. 8

## நவீனகதா புத்தகசாலை,

(ஹெட் ஆபீஸ்)
111, மங்கமாரி வீதி,
இரங்கூன்.

(பிரான்ச் ஆபீஸ்)
8, கூலி பஜார் சாலை,
சென்னை.

# நீல அறையின் அதிசயம்

அல்லது

# காணமற்போன மாணிக்கம்.

இது ஒரு உலக அனுபவியால் எழுதப்பெற்ற அருமையான நாவலாகும். துப்பறியும் தொகுதியைச் சேர்ந்தது, துப்பு கண்டுபிடிக்கப்படுந் தன்மையும் கதைச் சம்பவமும் விலையேறப்பெற்ற மாணிக்கக் கல்லொன்று காணமற்போதலும் படிப்பவர்களுடைய மனதை ஆச்சரியத்திற்குட்படுத்தும். இந்தப்புத்தகத்தில் இன்னொரு விசேஷமாவது: நம்முடைய நாட்டவர்களுடைய நன்மையைக்கருதி பல சிர்திருத்தங்கள் இந்தப் புத்தகத்தில் தேடப்பட்டிருக்கின்றன. உலகத்தில் பேய் என்பது எது? அது யாரைப்பிடிக்கின்றது? அது நம்மைப் பிடிக்காமல் காப்பாற்றிக்கொள்ளுவது எப்படி? என்னும்படியான விஷயங்கள் விளக்கமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. கடன்படாத வாழ்க்கையைப் பெறுவதற்கான மார்க்கங்களையும், பிற நல்விஷயங்களையும் இதிற் படித்துணரலாம். இதை எல்லோரும் வாங்கி வாசிக்கவேண்டுமென்றே தற்சமயம் காகிதத்தின்விலை அபரிமிதமாயிருக்கும் சொற்பவிலை ஏற்படுத்தியிருக்கிறோம்.

3571

இதன் விலை அணா 6.

## நவீனகதா புத்தகசாலை,

(ஹெட் ஆபீஸ்,)
111, மங்கமாரி வீதி,
இரங்கூன்.

(பிரான்ச் ஆபீஸ்)
8, சூளை பஜார் சாலை,
சென்னை.